**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.51/2024 P.W .1**

| | |
|---|---|
| Name : ராமசாமி | Father's Name : நாராயணன் |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2024

----------------------------------------------------------------------------------------------------

15.05.2024

**முதல் விசாரணை:**

1) நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

கடந்த 20.05.2023 அன்று எதிரியின்மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதற்கான **புகார் மனு ஏற்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ. 1 ஆகும்**. **(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது )** கடந்த 20.06.2023 அன்று எதிரியின் தாயார் எழுதிக்கொடுத்த ஆதரவு கடிதம் அசல் ம.சா.ஆ. 2 ஆகும். **(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது )** கடந்த 15.07.2023 ம் தேதியிட்ட பாங்க் ஆப் இந்தியா வங்கி காரைக்குடி கிளை, **காசோலை (காசோலை எண் 055756 அசல் ம.சா.ஆ.3)** ஆகும். கடந்த 28.08.2023-ம் தேதியன்று ம.சா.ஆ 3 காசோலை போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக (**திருப்பப்பட்ட குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.4)** ஆகும். கடந்த 23.09.2023-ம் தேதியிட்ட இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட (**வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ 5 ஆகும்**.) மேற்படி ம.சா.ஆ.5 அறிவிப்பை 26.09.2023 அன்று எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட **அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ.6)** ஆகும். எதிரியின் **ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ. 7** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.